செ.வெ.எண்:10 நாள்:06.01.2018

திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவில் நியாயவிலைக்கடையில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் பொங்கல் பரிசு தொகுப்பு மற்றும் வேட்டி, சேலை ஆகியவற்றை வழங்கி திருநெல்வேலி மாவட்டத்தில் பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் பணியினை தொடங்கி வைத்தார்.

------

திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவில் காளியம்மன் கோவில் 4 நம்பர் நியாயாவிலைக் கடையில் கூட்டுறவுத்துறையின் மூலம் பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் விழா மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (06.01.2018) நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் பொங்கல் பரிசு தொகுப்பு மற்றும் வேட்டி சேலை ஆகியவற்றை வழங்கி திருநெல்வேலி மாவட்டத்தில் பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் பணியினை தொடங்கி வைத்தார்களள.

இவ்விழாவில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது:-

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஏழை எளிய மக்களுக்காக எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தியுள்ளார்கள். மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு அம்மா அவர்கள் செயல்படுத்திய அனைத்து திட்டங்களையும் இம்மி அளவுகூட குறையாமல் செயல்படுத்தி வருகிறார்கள். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பொங்கல் திருநாளன்று ஏழை எளிய மக்கள் புத்தாடை அணிந்து பொங்கல் வைத்து சிறப்பாக கொண்டாடிட பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் திட்டம் மற்றும் வேட்டி சேலை வழங்கும் திட்டத்தினை கொண்டு வந்தார்கள். இத்திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது. மேலும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஏழை பெண்களின் திருமணத்திற்கு 8 கிராம் தங்கம் வழங்கப்படும் எனவும், மகளிர்க்கு 50 சதவீதம் மானியத்தில் ஸ்கூட்டர் வழங்கப்படும் எனவும் அறிவித்தார்கள். திருமணத்திற்கு 8 கிராம் தங்கம் வழங்கும் திட்டம் ஏற்கனவே தொடங்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. 50 சதவீதம் மானியத்தில் ஸ்கூட்டர் வழங்கும் திட்டம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பிறந்த நாளன்று தொடங்கப்படவுள்ளது. 18 வயதிற்கு மேல் 40 வயதிற்கு கீழ் உள்ள 1 லட்சம் பெண்கள் இத்திட்டத்தில் பயன்பெறவுள்ளனர். பொங்கல் பரிசு தொகுப்பு திருநெல்வேலி மாவட்டத்தில் 8,21,564 குடும்ப அட்டை தாரர்களுக்கு வழங்கப்படவுள்ளது. பொங்கல் பரிசு பொருட்களை அனைவரும் பெற்று பொங்கல் பண்டிகையை சிறப்பாக கொண்டாடிட வாழ்த்தி விடைபெறுகிறேன். என பேசினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:-

ஏழை எளிய மக்கள் சிறப்பாக பொங்கல் பண்டிகையை கொண்டாடும் வகையில் பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் திட்டத்தினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 05.01.2018 அன்று சென்னையில் தொடங்கி வைத்தார்கள். தொடர்ச்சியாக திருநெல்வேலி மாவட்டத்தில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் இன்று தொடங்கி வைத்துள்ளார்கள். திருநெல்வேலி மாவட்டத்தில் அரிசி குடும்ப அட்டைதாரர்கள், காவலர் குடும்ப அட்டைதாரர்கள், இலங்கை அகதிகள் குடும் அட்டை ஆகிய குடும்ப அட்டைதாரர்கள் மொத்தம் 8,21,564 குடும்ப அட்டை தாரர்களுக்கு ரூ.3,32,73,345 மதிப்பீட்டில் ஒவ்வொரு குடும்ப அட்டைதாரர்களுக்கும் 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை, 2 அடி நீளமுள்ள கரும்பு துண்டு, தோராயமாக 20 கிராம் முந்தரி, 20 கிராம் திரட்சை மற்றும் 5 கிராம் ஏலக்காய் வழங்கப்படுகிறது. மேலும் 7,33,495 குடும்ப அட்டைகளுக்கு இலவச வேட்டி, சேலைகளும் வழங்கப்படுகிறது. திருநெல்வேலி மாவட்டதிலுள்ள அனைத்து நியாயவிலை கடைகளின் மூலம் வரும் 12.01.2018 வரை விநியோகிக்கப்படும் பொதுமக்கள் கிடைக்குமோ, கிடைக்காதோ என ஒரே நாளில் கூட்டமாக செல்ல வேண்டாம் தகுதியுள்ள குடும்ப அட்டை

அனைவருக்கும் கண்டிப்பாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டள்ளது. எனவே அவசரமின்றி பொங்கல் பரிசு தொகுப்பினை பெற்றுக்கொள்ளலாம் பொங்கல் பண்டிகையை சிறப்பாக கொண்டாடிட வாழ்த்தி விடைபெறுகிறேன் என பேசினார்.

இந்நிகழ்ச்சியில் திருநெல்வேலி வருவாய் கோட்டாட்சியர் திருமதி.மைதிலி, கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் திரு.குருமூர்த்தி, மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.புண்ணியகோட்டி, தமிழ்நாடு கூட்டுறவு விற்பணை இணைய துணைத்தலைவர் திரு.கண்ணன் (எ) ராஜூ, திருநெல்வேலி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் திரு.வெங்கடேசன், திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்ட நெசவாளர் கூட்டுறவு இணைய தலைவர் திரு.ஆறுமுகம், ஆவின் தலைவர் திரு.ரமேஷ், திருநெல்வேலி கூட்டுறவு பேராங்காடி தலைவர் திரு.பள்ளிக்கோட்டை செல்லத்துரை, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.சுப்பையா பாண்டியன் முக்கிய பிரமுகர்கள் திரு.சுதா பரமசிவம், திரு.பரணி சங்கரலிங்கம், கூட்டுறவு துணை பதிவாளர் திரு.தொண்டிராஜ், மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.